# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## கலைப்பீடம்
## மூன்றாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் II – 2017/2018
## SOC 3267- கல்வியும் சமூகமும்
**இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று (03) வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

---

01. சமூகக் கட்டமைப்பில், கல்விக்கும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கும் இடையிலான இயல்பான தொடர்பினைப் பற்றி ஆராய்தல் கல்விச் சமூகவியலாளர்களின் வகிபங்காகும் என நீங்கள் எண்ணுகின்றீர்களா? உங்களது விடையினை விளக்குக.

02. சமூகத்துக்காகப் பாடசாலையால் ஆற்றப்படும் தொழிற்பாடுகளைப் பற்றிய தொழிற்பாட்டுவாதக் கலந்துரையாடலை விமர்சன ரீதியாக ஆராய்க.

03. 'மாணவர் மையச் சூழலுக்கு வகுப்பறையை மாற்றுகின்ற போது ஆசிரியரதும் மாணவரதும் மனப்பாங்கில் மாற்றம் தேவைப்படுகின்றது'. ஜோன் டுவியின் (John Dewey) கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி இந்நோக்கினை விமர்சன ரீதியாகக் கலந்துரையாடுக.

04. 'தற்போதுள்ள சமூக அமைப்பில், வேறுபட்ட பாடசாலைகளுக்கு வேறுபட்ட வள ஒதுக்கீடு மற்றும் பாடசாலைப் பொருட்கள் என்பன தவிர்க்க முடியாதவை'. இதனை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இலங்கையிலிருந்து உதாரணங்களுடன் உமது விடையினைக் கலந்துரையாடுக.

05. வகுப்பறைகளில் கலப்புக் கற்றல் முறையை அறிமுகப்படுத்தும் உலகளாவிய ஆர்வமானது ஆசிரியர்களின் வகிபங்கிற்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் என நீர் எண்ணுகின்றீரா? உமது அனுபவங்களின் துணையுடன் விமர்சன ரீதியாகப் பரீட்சிக்க.

06. பாரம்பரிய வகுப்பறைகளைப் பயன்படுத்தும் மாணவர்களை, அறிவை ஆராய்ந்து சுயாதீனமாகக் கற்க விரும்பும் மாணவர்களாக மாற்றுவதற்கு நீங்கள் முன்வைக்கும் முன்மொழிவுகள் எவை? உமது அனுபவங்கள் மற்றும் கோட்பாட்டு அறிவு என்பவற்றுடன் தொடர்புபடுத்திக் கலந்துரையாடுக.

**************